TAMIL NADU ... 6 NOV 1972 MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1972 ஆகஸ்ட் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதல் ஐந்து கேள்விகள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். இப்பொழுது கேள்வி எண் 61 எடுத்துக் கொள்ளப் படுகிறது.

Working conditions of hotel workers

* 61 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the One Man Commission which went into the conditions of Hotel Workers has submitted its report;

(*b*) if so, whether it will be laid on the Table of the House; and

(*c*) the steps proposed to be taken to implement the recommendations?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) & (உ) ஓட்டல் தொழில் தனி அலுவலரின் முக்கியப் பரிந்துரைகள் இந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் உட்பட அரசு பிறப்பித்த ஆணையின் படியொன்று * பேரவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. கே. டி. கே தங்கமணி : இந்த ராஜன் கமிட்டியினுடைய சிபார்சினை அவைமுன் அமைச்சரவர்கள் வைத்திருப்பதைப் பற்றி மகிழ்ச்சி. அதன் அடிப் படையில் ஏற்கெனவே . இருக்கக்கூடிய சட்டத்திற்குத் திருத்த மசோதா கொண்டு வரப்படுமா? அப்படியானால், எப்பொழுது கொண்டு வரப்படும்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ராஜன் கமிட்டியினுடைய பரிந் துரையைப் பரிசிலனை செய்து, அதற்குப் பிறகு நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

---

* 455-467-ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சடிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே தங்கமணி: ஏதாவது ஒரு திருத்த மசோதாவின் அடிப்படையில் அது நிறைவேற்றப்படுமா? அல்லது, வேறு எந்த முறையிலாவது நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இதுபற்றி இப்போது திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*62. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) குளித்தலை வட்டம், கருப்பத்தூர் புதுப்பட்டி அரிசன மக்களுக்கு வீட்டு மனை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) கருப்பத்தூர் புதுப்பட்டி கிராமத்தில் உள்ள 27 அரிசனங்களுக்கு வீட்டு வசதி அளிக்க கருப்பத்தூர் கிராமத்தில் புல எண் 31-ல், 2.22 ஏக்கர் பரப்பளவுள்ள புன்செய் பட்டா நிலங்களை நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் 4 (1) பிரிவின் கீழ் உள்ள முன்மொழிவு அறிவிப்பு வரைவு சமூக நலத்துறையின் 15-12-1971 நாளிட்ட 2270-ஆம் எண் அரசு வாலாய ஆணையில் ஏற்கப்பட்டு, 29-12-1971 நாளிட்ட பாகம் 11 பிரிவு 1 தமிழ்நாடு அரசிதழில் 1491 பக்கத்தில் (ஆங்கிலம்) வெளியிடப்பட்டது. பிரிவு 6 விளம்பரம் மாவட்டாட்சியரிடமிருந்து இன்னும் வரவில்லை. அதைப் பெற்றதும் தக்க நடவடிக்கை மேற்கொண்டு அரசிதழில் வெளியிட வகை செய்யப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த நிலத்தின் மதிப்பீட்டின் விவரத்தை அறியலாமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மதிப்பீடு எவ்வளவு என்று தற்போது குறிப்பில் இல்லை. 4 (1) நோட்டிபிகேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. மதிப்பீட்டின் விவரம் தற்போது இல்லை.

*63 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், சிந்தல்வாடி கிராமம் வெட்டுக்கட்டியிலுள்ள அரிசன, பின் தங்கிய மக்களுக்கு வீட்டு மனைக்கு உரிய நிலத்தை கையகப்படுத்த எப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?